மலர் : 12 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 7

TVGM தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विल्लज मिनस्ट्री

ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

மே 2012

| ஆண்டுசந்தா | இந்தியா ரூ.25 | வெளிநாடு ரூ. 250 |
|---|---|---|

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர பத்திரிக்கை




## TVGM - 2012 மே
## கர்த்தரின் வாக்குத்தத்தம்

**நான், நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்.**

ஏசாயா 51 : 12.

கர்த்தருடைய கிருபையினால் திருச்சி மாவட்டம் – **பூலாங்குடி** கிராமத்தில் கட்டப்பட்ட ஜெபவீடு 20.03.2012 அன்று **பாஸ்டர் எசேக்கியேல் மூர்த்தி** ( மலேசியா ) அவர்களால் தேவனுடைய நாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டது.



நன்றி : Yishun Evangelical Church - Singapore.

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்






**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
TASOL ஸ்தாபகர்
**Cell : 94449 80445**
100village@tvgm.org

P.T. **கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்
**Cell : 94435 44628**
jesus100villages@yahoo.com


*கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே !*

*இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன் !*

*கர்த்தருடைய கிருபையால்,* ***பூலாங்குடி*** *கிராமத்தில் ( திருச்சி ) கட்டப்பட்ட ஜெபவீட்டை* ***பாஸ்டர் எசேக்கியேல் மூர்த்தி*** *( மலேசியா ) அவர்கள் 20.03.2012 அன்று பிரதிஷ்டை செய்து வைத்தார்கள்.*

*தமிழ்நாட்டிலுள்ள அச்சரப்பாக்கம், கல்பாக்கம், அதிராம்பட்டிணம் போன்ற கிராமங்களில் ஜெபவீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த வேலைகள் முடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.*

*25.03.2012 அன்று பில்லுவெட்டு விடுதியில் TVGM தையற்பள்ளியில் பயின்ற 12 பெண்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.*

*2012 மார்ச் மாதத்தில் அநேக சிறப்பு விருந்தினர்கள் TVGM க்கு வந்து எங்களை உற்சாகப்படுத்தினார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*2012 ஏப்ரல் 29 - மே1 வரை நடைபெற உள்ள ஆண்டுவிழா நிகழ்ச்சிகளுக்காகவும், மே 2 அன்று செல்லவிருக்கும் உல்லாச பயணத்திற்காகவும் ஜெபியுங்கள்.*

*மே 26 அன்று கன்னியாகுமரி மாவட்டம் -* ***மார்த்தாண்டத்தில்*** *நடைபெற உள்ள TVGM தரிசனமுகாமிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.*

***கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக !***

*கிறிஸ்துவின் பணியில்*
***ஸ்டீபன் கிறிஸ்டோபர்.***

**Date : 11.04.12**

# நான் , நானே
# உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்.

ஏசாயா 51 : 12

இந்த மாத வாக்குத்தத்தத்திற்காக காத்திருக்கும் சகோதர, சகோதரிகளே!

இந்த மாதம் தேவன் கொடுக்கும் வாக்குத்தத்தம் :

**ஏசாயா 51 : 12**

**நான், நானே உங்களுக்கு**

**ஆறுதல் செய்கிறவர்.**

ஆம்! கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே, அநேக சூழ்நிலைகளில் நாம் முற்றிலும் துவண்டு காணப்படலாம். தனிமையை அனுபவிக்கலாம். நாம் வாழ்க்கையை வெறுத்து விடலாம். ஆனால் கர்த்தர் நமக்கு ஆறுதல் தருகிறவர் என்பதை மறந்து விடக்கூடாது. நம்முடைய தேவன் அவருடைய பிள்ளைகளுக்கு ஆறுதல் தருவேன் என்று வாக்களித்துள்ளார். ஆகவே நாம் ஆறுதல் அடைய வேண்டுமானால் அவரையே நோக்கிப் பார்க்க வேண்டும். இதை நாம் 2கொரி. 1 : 3, ரோமர் 15 : 15ல் வாசிக்கலாம். பொதுவாக நாம் ஆறுதல் அடைய மற்ற சுலபமான வழிகளை தெரிந்து கொள்கிறோம். நாம் ஒரு வேளை ஓய்வு எடுக்கலாம் அல்லது ஆலோசகரை நாடலாம் அல்லது நண்பரை அழைக்கலாம். ஆனால் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் தேவன் ஒருவர் தான் நமக்கு ஆறுதல் செய்கிறவர் என்பதாகும்.

நாம் ஏசாயா 51ஐ வாசித்தால், இஸ்ரவேலர் தங்கள் கஷ்டத்திலிருந்தும் ( ஏசா. 51 : 17 – 23 ), தண்டனையிலிருந்தும் (ஏசா. 51 : 17) தங்கள் இயலாமையிலிருந்தும் ( ஏசா. 51 : 18 ) பாழ்க்கடிப்பும், சங்காரத்திலிருந்தும் ( ஏசா. 51 : 19,20 ) மீட்கப்பட்டதாக பார்க்கலாம். இந்த நிலையில் தான் தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆறுதல் செய்கிறார் ( ஏசா. 51 : 12 ). தேவன் இஸ்ரவேலரை அற்புதமாக மீட்டுக் கொண்டு ( ஏசா. 51 : 15 ), அவர்களை பாதுகாத்தார் ( ஏசா. 51:16) என்று பார்க்கலாம்.

மேலும் கர்த்தர் தத்தளிப்பின் பாத்திரத்தை ஜனங்களின் கைகளிலிருந்து நீக்கி அதை அவர்களை சஞ்சலப்படுத்தினவர்களின் கையில் கொடுப்பேன் என்று சொல்லுகிறார்.

ஆம், கர்த்தர் நம் வாழ்வில் அற்புதம் செய்யும்போது எதிரிகள் நம்மை விட்டு ஓடி போவார்கள். நாம் நம் எதிரிகளை தேடினாலும் அவர்களை காணமாட்டோம். இதைப் பற்றி விரிவாக பார்ப்போம்.

கர்த்தர் எவ்வாறு தன் பிள்ளைகளுக்கு ஆறுதல் செய்கிறார் ?

**1. கர்த்தர் தம்முடைய வல்லமையினால் அவருடைய ஜனங்களை விடுவிக்கிறார்.**

**2. கர்த்தர் நம்முடைய பயங்களையெல்லாம் நீக்கிப் போடுவார்.**

**3. கர்த்தர் நமக்கு வாக்குத்தத்தம் அளிக்கிறார்.**

**முதலாவதாக** நாம் ஏசாயா **51 :13**ன் பின்னணியைப் பார்க்கும்போது, அசீரியர்கள் கைகளிலிருந்து எருசலேமின் சிறையிருப்பை நீக்கிப் போடுகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் அநேக நேரங்களில் கடினமான பாதைகளை கடக்கும்போது, கர்த்தர் அவர்களுடைய கூக்குரலைக் கேட்டு அவர்களை விடுதலைச் செய்வதை பார்க்கிறோம். ஆம் ! நம்முடைய வல்லமையுடைய தேவன் நமக்காக யுத்தம் பண்ணுவார். நம்முடைய பிரச்சனைகளை கர்த்தரிடத்தில் ஒப்புக் கொடுத்தால் அதை அவர் ஒன்றுமில்லாமல் ஆக்கிவிடுவார்.

மேலும் வாக்குத்தத்தத்த வசனத்தின் முதல் பகுதியை நாம் பார்க்கும்போது " நான், நானே " என்ற ஆரம்பிக்கிறது. இந்தப் பகுதி ஏசா.**51:9**ன் பிரதிபலிப்பு – ராகாப்பை துண்டித்ததும் வலுச் சர்ப்பத்தை வதைத்ததும் நீர் தான் அல்லவோ ? கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை ஆறுதல் படுத்த வல்லமையுள்ளவராயிருக்கிறார்.

கர்த்தருடைய வல்லமையைக் குறித்து யோபு **26 : 12 – 14**ல் காணலாம். "அவர் தம்முடைய வல்லமையினால் சமுத்திர கொந்தளிப்பை அமரப் பண்ணி, தமது ஞானத்தால், அதின் மூர்க்கத்தை அடக்குகிறார். தம்முடைய ஆவியினால் வானத்தை அலங்கரித்தார்; அவருடைய கரம் நெளிவான சர்ப்ப நட்சத்திரத்தை உருவாக்கிற்று. இதோ அவைகள் அவருடைய கிரியையில் கடைக்கோடியானவைகள், அவரைக் குறித்து நாங்கள் கேட்டது எவ்வளவு கொஞ்சம் ; அவருடைய வல்லமையின் இடிமுழக்கத்தை அறிந்தவன் யார் என்றான் ."

**இரண்டாவதாக** கர்த்தர் நம்முடைய பயங்களை எல்லாம் நம்மை விட்டு நீக்கி நமக்கு ஆறுதல் செய்கிறார். இன்றைய காலக் கட்டத்தில் நாம் ஆண்டவர் மீது விசுவாசமில்லாத ஜனங்களைக் கண்டு பயப்படுகிறோம். அநேக நேரங்களில் அப்படிப்பட்டவர்கள் நம்மை பயமுறுத்தும்போது, நாம் அவர்களைக் கண்டு அஞ்சுகிறோம். ஆனால் அவர்கள் எல்லாம் கர்த்தருடைய கண்களுக்கு புல்லைப் போல இருக்கிறார்கள் என்பதை **ஏசாயா 40 :6**ல் காணலாம் – "மாம்ச மெல்லாம் புல்லைப் போலவும், அதின் மேன்மையெல்லாம் வெளியின் பூவைப் போலவும் இருக்கிறது. கர்த்தரின் ஆவி அதின் மேல் ஊதும் போது, புல் உலர்ந்து, பூ உதிரும் ; ஜனமே புல். புல் உலர்ந்து பூ உதிரும் ; நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும்." நாம் கர்த்தருக்கு மாத்திரம் பயப்படுகிறவர்களாக காணப்பட வேண்டும்.

**மூன்றாவதாக,** கர்த்தர் அவருடைய வாக்குத்தத்தங்களைக் கொடுத்து நமக்கு ஆறுதல் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தை தரும்போது நாம் ஆறுதல் அடைகிறோம். நாம் நம்முடைய சிந்தனைகளிலும், உணர்ச்சிகளிலும் பெலவீனராயிருக்கலாம்.ஆனால் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை நினைவுகூரும்போது அது நம்மை திடப்படுத்தும்.

**கர்த்தருடைய ஆறுதலைப் பெற்றுக் கொள்ள என்ன செய்ய வேண்டும்?**

**1. நமக்கு ஆறுதல் அவசியம் என்பதை உணர வேண்டும்.**
**2. கர்த்தர் எப்படிப்பட்டவர் என்பதை மறக்கக் கூடாது.**
**3. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட எதிர்காலத்தைக் குறித்து ஆவலுடன் எதிர்பார்க்க வேண்டும்.**

**முதலாவதாக,** நமக்கு ஆறுதல் அவசியம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய பாவங்களே நமக்கு கஷ்டங்களையும், பிரச்சனைகளையும் கொண்டு வருகிறது என்பதை உணர வேண்டும். அநேக நேரங்களில் இதை நாம் மறந்து விடுகிறோம். நம்முடைய பாவங்கள் தான் நம்முடைய கவலைகளுக்கு காரணமென்பதை மறந்து, மற்ற காரணங்களை சிந்திக்கின்றோம். நாம் கர்த்தரை மறந்து பாவம் செய்யும்போது தான் நமக்கு துன்பங்கள் வருகின்றன. ஆகவே கர்த்தருக்கு விரோதமாக செய்யும் பாவங்களை உணர்ந்து, அவருடைய ஆறுதலைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**இரண்டாவதாக**, கர்த்தர் நம்மை உண்டாக்கியவர் என்பதையும், அவருடைய பரிசுத்தத்தின் வல்லமையையும் நாம் மறக்கக் கூடாது. நம்முடைய கர்த்தர் நம்மை கைவிடுகிறவர் அல்ல. அவர் மனிதர்களைப் போல மாறிப் போகிறவர் அல்ல. ஆனால் கர்த்தர் நம்வாழ்க்கையில் ஆர்வமுள்ளவராயிருந்து நம் பாவங்களையும் நினையாமல் நமக்கு உதவி செய்கிறார். நாம் கீழே விழும்போது, நம் மேல் பொறுமையுள்ளவராயிருந்து நம்மை காப்பாற்றுகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் இதை அநேக நேரங்களில் மறந்து போனார்கள் என்பதைப் பார்க்கலாம். ஏசாயா 51 : 13 'வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற்கு நீ யார்?' ஆகவே கர்த்தர் மகா வல்லமையுள்ளவர் என்பதையும், அவர் நம்மை எல்லா சூழ்நிலைகளிலும் தப்புவிக்க வல்லவர் என்பதையும் மறக்கக் கூடாது.

**மூன்றாவதாக,** நம்முடைய துன்பங்களுக்கெல்லாம் முடிவு உண்டு என்ற எண்ணம் வேண்டும். நாம் அவருடைய வாக்குத்தத்தத்தை பற்றிக் கொண்டு, அதை சுதந்தரித்து கொள்ள வேண்டும். அநேக நேரங்களில் நாம் நம்பிக்கை இழந்து காணப்படுகிறோம். நாம் அவருடைய வாக்குத்தத்தத்தை பற்றிக் கொள்ளும்போது, நம்முடைய தத்தளிப்பை நீக்கிப் போடுவார் என்பதை ஏசாயா 51: 22ல் பார்க்கலாம். 'இதோ, தத்தளிப்பின் பாத்திரத்தை உன் கையிலிருந்து நீக்கிப் போடுகிறேன், இனி என் உக்கிரத்தினுடைய பாத்திரத்தின் வண்டல்களை நீ குடிப்பதில்லை.'

**பக்தன் பாடுகிறார் :**

**ஆறுதலின் தெய்வமே**
**உம்முடைய திருச்சமுகம்**
**எவ்வளவு இன்பமானது.**

இந்தப் பாடலை பாடிக்கொண்டே இருங்கள்.

பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

**'கர்த்தர் என் கவலைகளை நீக்கி எனக்கு ஆறுதல் செய்வார்.'**

**தேவனுக்கே மகிமை !**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ.** 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

## திருச்சி மாவட்டம் - மணிகண்டம் யூனியன்

# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்: 2012 ஏப்ரல் 30** திங்கள் காலை **9** மணி முதல் **மே 4** வெள்ளி இரவு **10** மணி முடிய **மணிகண்டம் யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து **"வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்"** இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம்** : **2012 ஏப்ரல் 30** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம்** : **2012 மே 4** வெள்ளி இரவு **7 - 10** மணி

### உபவாச ஜெபம் நடைபெறும் இடம்

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர் -** TVGM

**100 - கிராமம்,**

**சோமரசம்பேட்டை, திருச்சி - 620 102.**

**போன் :** 0431 - 2607241 **செல் :** 99432 81640

**__தகுதி__** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**__பிரயாணப்படி__ :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, **அனுமதி தபால்** பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**__முக்கிய அறிவிப்பு__ :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**__சகல தொடர்புகளுக்கும்__ :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்,

**100 - கிராமம்,** சோமரசம்பேட்டை, திருச்சி - 620 102. **Web: tvgm.org**

**Ph : 0 - 431 - 2607241 , 94449 80445 Email : 100village@tvgm.org**

**__தேவை__ :** ஒரு மாதம் *10,000* வீடுகளுக்கு சுவிசேஷம் அறிவிக்க ரூ.75000 தேவைப்படுகிறது. கர்த்தரால் ஏவப்படுகிறவர்கள் தாங்க முன்வாருங்கள்.

# திருச்சி மாவட்டம் - மருங்காபுரி யூனியன்
# 100-கிராம ஊழியம் அறிக்கை

## தேதி : 12 .03. 2012 முதல் 16.03.2012 முடிய



கர்த்தருடைய கிருபையினால் திருச்சி – **மருங்காபுரி** யூனியனில் 12.03.2012 திங்கள் முதல் 16.03.2012 வெள்ளி வரை **100–கிராம ஊழியம்** ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள் கூடுமிடம், உணவு இவைகளை துவரங்குறிச்சி ஏ.ஜி. சபை **போதகர் நெகேமியா கணபதி** அவர்களும், கடைசிநாள் கூடுமிடம், உணவு இவைகளை **'இயேசுவுக்கே புகழ்'** சபையின் பாஸ்டர் கனகராஜ் சாமுவேல் அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து 53 கிராம ஊழியர்கள் வந்து கலந்துகொண்டு ஊழியம் செய்தார்கள். முதல் நாள் ஜெபத்தில் மருங்காபுரி யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் சிங்கப்பூர் – ஏலீம் ரிவைவல் சர்ச் **போதகர் டேனியல்ராஜ், சகோதரி ஷீலா** மற்றும் குழுவினரும் கலந்துகொண்டு ஊழியங்களுக்காக, ஊழியர்களுக்காக ஜெபித்து, தேவசெய்தி கொடுத்து உற்சாகப் படுத்தினார்கள்.




இதன்பின் கிராம ஊழியர்களை **12** குழுக்களாக பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். மதிய உணவுக்கு பின் கிராமங்களுக்குள் கடந்து சென்றார்கள். கிராமங்களில் கிடைக்கிற இடங்களில் தங்கிக் கொண்டு, **5** நாட்களில் கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து இயேசுவே ஆண்டவர் என்று அறிவித்து ஊழியம் செய்தார்கள்.

இந்த ஊழியத்தின்போது மொத்தம் 10,118 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 10,000 **இயேசுவே இரட்சகர்** கைப்பிரதிகள், 5000 மற்ற கைப்பிரதிகள், 9000 சிலுவைக்கொடிகள், 100 **'நம் மத்தியில் வாழ்ந்த அவர்'** புத்தகமும் இலவசமாக வழங்கப்பட்டன. ஊழியத்தின் மூலம் **111** புறமத நண்பர்கள் தங்கள் விலாசங்களை கொடுத்து தபால் மூலம் வேதபாடம் அனுப்ப கேட்டுக் கொண்டார்கள்.

ஊழியங்களை முடித்து, மீண்டும் பாலக்குறிச்சியிலுள்ள '**இயேசுவுக்கு புகழ்**' திருச்சபையில் கூடி ஜெபித்து, கர்த்தர் தங்களை கிராம ஊழியத்தில் எப்படியாக பயன்படுத்தினார் என்பதை சாட்சியை கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள். **பாஸ்டர் கனகராஜ் சாமுவேல்** அவர்கள் கிராம ஊழியர்கள் அனைவருக்கும் மதிய விருந்து கொடுத்தார்கள். பின்பு அவரவர் ஊர்களுக்கு திரும்பி சென்றார்கள்.

# கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

குழு 1 -**சகோதரிகள் : மணியம்மாள், தேவகிருபை, ரெபேக்காலட்சுமி, ஜோதிமணி, ராகேல்.**

நாங்கள் ஊழியத்திற்கு செல்ல பஸ் ஏறினபோது இருவர் வந்து எங்களை பஸ்ஸை விட்டு இறங்கும்படி தர்க்கம் பண்ணினார்கள். சில துாஷண வார்த்தைகளை பேசி, மதம் மாற்ற வந்தீர்களா ? என்று சொல்லி நாங்கள் வைத்திருந்த சுவிசேஷப் புத்தகங்களை யெல்லாம் வாங்கி பஸ் ஸ்டாப்பில் வைத்து தீ கொளுத்தினார்கள். நாங்கள் அந்த இடத்தை விட்டு **சிங்கிலிப்பட்டி** என்ற கிராமத்தில் ஒரு இடத்தில் கூடி ஜெபித்தோம். ஒரு சில கிராமங்களில் ஊழியம் செய்தோம். மொத்தம் 800 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 2 -**சகோதரர்கள் : அமல்ராஜ், அந்தோணி, செல்வராஜ், ஸ்டீபன்ராஜ்.**

**கீழ்வால்பட்டி**யில் தங்கியிருந்து சுற்றியுள்ள கிராமங்களில் ஊழியம் செய்தோம். பலர் எங்களை அன்போடு ஏற்றுக்கொண்டு சத்தியத்தைக் கேட்டார்கள். டீ கொடுத்து உபசரித் தார்கள். **அரசனம்பட்டியில்** அசுத்த ஆவியால் பாதிக்கப்பட்டவர்களும், நோய் உள்ளவர்களும் எங்களிடம் வந்து ஜெபித்தார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 3 - **பாஸ்டர் ஆல்வின், சகோதரர்கள் : சாந்தப்பன், மைக்கேல், முத்து, ரூபன்,**

**அம்மாபனை** என்ற கிராமத்தில் ஒருவர் எங்களிடம் வந்து மதம் மாற்ற வந்தீர்களா ? என்று சொல்லி அடித்தார். நாங்கள் துவரங்குறிச்சிக்கு வந்து விட்டோம். அவர்களும் எங்களை பின் தொடர்ந்து வந்து போலீஸ் நிலையத்தில் எங்களை கொண்டுபோய் புகார் செய்தார்கள். போலீஸ் அதிகாரி எங்களை விசாரித்தபோது நாங்கள் நடந்த சம்பவத்தைக் கூறினோம். அப்பொழுது போலீஸ் அதிகாரி நீ எப்படி இவர்களை அடிக்கலாம் எனக் கூறி அவர்களை லாக்கப்பில் தள்ளி, எங்களை அனுப்பி விட்டார்கள். நாங்கள் **பாலக்குறிச்சி** கிராமத்திற்கு சென்று சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்து ஊழியம் செய்தோம். மொத்தம் 718 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 4 -**சகோதரிகள் : சாந்தி ஸ்டேன்லி, லூாயிஸ் அம்மாள், பால்தங்கம், அந்தோணிமேரி, கிருபா பழனியம்மாள்.**

**கஞ்சநாயக்கன்பட்டி**யை சுற்றியுள்ள கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து **இயேசுவே ஆண்டவர்** என்று அறிவித்தோம். ஒருவரிடம் சுவிசேஷப் புத்தகத்தை கொடுத்தபோது அவர் நான் வாங்கமாட்டேன், அதற்குள் ஒரு சக்தி இருக்கிறது என்று வாங்காமல் ஓடி விட்டார். இவரை அடுத்த நாள் பார்த்து அழைத்து **'இயேசு உங்களை நேசிக்கிறார்'** என்று சொல்லி சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

குழு 5 -**சகோதரிகள் : பிச்சையம்மாள், எஸ்தர் சாலமோன், தேவபாக்கியம், எஸ்தர் எபிநேசர்.**

ஊழியத்திற்கு எதிர்ப்புகள் இருக்கிறது

என்று அறிந்து மறைமுகமாக ஊழியம் செய்தோம். அநேகருக்கு ஜெபித்தோம். கடைசிநாளில் சிலர் எங்களை வலுக்கட்டாயமாக போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போய் புகார் செய்தார்கள். போலீசார் எங்களை விசாரித்துவிட்டு போகச் சொன்னார்கள். ஊழியத்திற்கு விரோதமாய் வந்தவர்கள் எங்களை மிகவும் இழிவாய் பேசினார்கள். கர்த்தருக்காக எல்லாவற்றையும் சகித்து கொண்டோம். மொத்தம் 400 சுவிசேஷப் புத்தகங்கள், 400 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6 -சகோதரிகள் : எஸ்தர் கனகாம்புஜம், கஸ்தூரி சுப்பையா, மரியாள் தாவீது, லூர்துமேரி.**

பழைய பாளையத்தில் தங்கி பிடாரிபட்டி, செவல்பட்டி ஆகிய கிராமங்களில் ஊழியம் செய்தோம். பழையபாளையம் கிராமத்திற்கு திரும்பி வந்துகொண்டிருந்தபோது இரு வாலிபர்கள் பைக்கில் வந்து எங்களிடமிருந்த சுவிசேஷப் புத்தகங்கள், பையில் வைத்திருந்த கொஞ்சம் பணம், செல்போன், ரசீதுபுக் இவைகளை பிடிங்கிக் கொண்டு கன்னத்தில் அறைந்து போலீஸ் ஸ்டேசனுக்கு வந்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு போய் விட்டார்கள். நாங்கள் போலீஸ் நிலையத்திற்கு சென்று கேட்டபோது, அந்த இருவரில் ஒருவன் எங்களிடம் எதையும் பறிக்கவில்லை, அடிக்கவில்லை என்று சாதித்தான். பின்பு எங்களை போலீசார் விசாரித்துவிட்டு அனுப்பி விட்டார்கள். மொத்தம் 575 சுவிசேஷப் புத்தகங்கள், 500 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7 -சகோதரிகள் : சாந்தக்குமாரி, தெபோராள், சாரதா, லீலா.**

நாங்கள் சென்ற கிராமத்தில் மக்கள் சுவிசேஷப் புத்தகங்களை வாங்கிக் கொண்டார்கள். சில கிராமங்களில் ஒரு சிலர் எதிர்ப்பு தெரிவித்து ஊழியம் செய்யக்கூடாது என்றார்கள். வேறு கிராமங்களுக்கு சென்று அநேகருக்காக ஜெபித்து ஊழியம் செய்தோம்.மொத்தம் 1175 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8 -சகோதரர்கள் : யோசுவா, நோவா, பீட்டர், ஜெபமலைநாதன்.**

துவங்குறிச்சியை சுற்றியுள்ள கிராமங்களில் ஊழியம் செய்தோம். அங்கே எதிர்ப்பு இருந்தது. பாலக்குறிச்சி கிராமத்திற்கு போய் ஊழியம் செய்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9 -சகோதரர்கள் : பிரேம் ஆனந், சிவக்குமார், ஆசீர்பாண்டி, ஆபிரகாம், சூசைமாணிக்கம்.**

**மருங்காபுரி, அக்கரக்காடு, கல்லுப்பட்டி, யாகாபுரம், சமத்துவபுரம்** ஆகிய கிராமங்களுக்கு சென்று சுவிசேஷப் புத்தகங்கள், கைப்பிரதிகள், சிலுவைக்கொடிகள் கொடுத்து ஊழியம் செய்தோம். பிரச்சனை, வியாதியுள்ளவர் களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 950 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10 -சகோதரர்கள் : மாற்கு மாரியப்பன், செல்வராயர் பால், மகாராஜன், ஜெயக்குமார்.**

**பொருவாள் பெத்தகோன்பட்டி, கோரக்குறிச்சி** கிராமங்களில் சுவிசேஷப் புத்தகத்தை ஆர்வமாக வாங்கினார்கள். கிறிஸ்தவ எதிர்ப்பு இயக்கத்தினருக்கு கர்த்தர் எங்களை விலக்கி காத்துக் கொண்டார். மொத்தம் 950 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 11 -சகோதரிகள் : மரியம்மாள், மேரிமீனா, செல்லக்கனி, அன்னாள், ஜோதிமணி.**

கருமலை கிராமத்தில் இரவில் தங்க இடம் கிடைக்காததால் ஒரு கடையில் படுத்துக் கொள்ள ஒரு இந்து குடும்பத்தினர் உதவி செய்தார்கள். **கவுண்டம்பட்டி** கிராமத்தில் மக்கள் ஆர்வமாக சுவிசேஷத்தைக் கேட்டனர். ஒரு பெண் எங்களை வீட்டிற்கு அழைத்து எங்களுக்காக ஜெபியுங்கள் என்றும், இன்று இரவு எங்கள் வீட்டில் சாப்பிட்டு, தங்கிவிட்டு செல்லுங்கள் என்றாள். மொத்தம் 900 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 12 -சகோதரிகள் : வசந்தா ஸ்டீபன், அன்னக்கிளி, கவிதா, கிளமெண்ட்ஸ்மேரி.**

நாங்கள் வியாதி, பிரச்சனை உள்ளவர்களுக்காக ஜெபித்தோம். வீடுவீடாக சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்தோம். மொத்தம் 600 சுவிசேஷப் புத்தகங்கள், 650 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம். **தேவனுக்கே மகிமை**

## 2012 மே மாத இயேசுவை விரும்புவோர் முகாம்

மாவட்டம் : **காஞ்சிபுரம்**
யூனியன் : **திருப்போரூர்**
நாள் : 12.05.2012 சனி
நேரம் : காலை 9 மணி

**நடைபெறும் இடம்**

**பாஸ்டர் ரஞ்சி**
**I.P.C.கர்மேல் சபை**
**சமத்து நகர், கலிப்பட்டூர்,**
**படூர் - 603 103.**
**காஞ்சிபுரம் மாவட்டம்.**
**செல் : 9943281640**

## 2012 பிப்ரவரி மாத இயேசுவை விரும்புவோர் முகாமில் கலந்துகொண்ட சகோ. M.பாலு அவர்களின் சாட்சி :

கடந்த 25.02.2012 அன்று மணச்சநல்லூரில் நடந்த **இயேசுவை விரும்புவோர் முகாமில்** குடும்பமாக கலந்துகொண்டோம். எங்கள் மனதிற்கு சந்தோஷமாக இருந்தது. நீங்கள் எங்கள் குடும்பத்திற்காக ஜெபம் பண்ணியதின் மூலம் எனக்கு நல்ல வேலை கிடைத்தது. அதோடு கண்ணிலுள்ள பிரச்சனைக்காக மருத்துவரிடம் சென்றபோது எந்த பிரச்சனையும் இல்லை என்று சொல்லி விட்டார்கள். கர்த்தர் உங்கள் ஜெபத்தைக் கேட்டு எனக்கும், என் குடும்பத்திற்கும் செய்த நன்மைக்காக அவருக்கு கோடாகோடி ஸ்தோத்திரம்.

**சகோ. M. பாலு, திருப்பஞ்சலி.**

## 2012 மார்ச் மாத இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை

கர்த்தருடைய கிருபையால் 24.03.2012 அன்று பெரம்பலூர் நித்தியஜீவ ஒளி ஜெபவீட்டில் **'இயேசுவை விரும்புவோர்'** முகாம் நடைபெற்றது.

அழைப்புக் கடிதம் பெற்றுக் கொண்டவர்களில் ஜெயலெட்சுமி என்ற சகோதரியும், அவரது இரண்டு பிள்ளைகளும், ஒரு வாலிப பெண்ணும் ஆக 4 பேர் கலந்து கொண்டார்கள். பாஸ்டர் பர்னபாஸ் இயேசுவைப் பற்றி கூறி தொடர்ந்து சபைக்கு வர ஆலோசனை வழங்கி ஜெபித்தார்கள். குறிப்பாக சகோதரி ஜெயலெட்சுமியின் தனிப்பட்ட பிரச்சனைக்காக, குடும்பத்தின் சமாதானத்திற்காக ஜெபித்தார்கள். இவர்களுக்கு மதிய விருந்தும் வழங்கி உபசரித்தார்கள்.

**தேவனுக்கே மகிமை !**

## கடித ஊழியம்

**சகோதரி ராணி, புதுக்கோட்டை.**

என் தம்பி மனைவிக்கு 5 வருடமாக குழந்தைபாக்கியம் இல்லாமலிருந்தது. தங்களுக்கு ஜெபிக்கும்படி கடிதம் எழுதினேன். தற்போது அவள் 3 மாத கர்ப்பிணியாக உள்ளாள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**சகோதரி தமிழரசி, ஈரோடு.**

என் தம்பியை காணவில்லை என்று ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தருடைய கிருபையால் தம்பி வந்து விட்டான். தேவனுக்கே மகிமை.

**திருமதி பாஸ்கரன், காஞ்சிபுரம்.**

என் மருமகனுக்கும், அவர் மகனுக்கும் கிட்னி அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்து சுகமாக இருக்கின்றார்கள். நீங்கள் ஜெபித்து உதவியது பலன் கொடுத்தது.

## ஈமெயில்

**சகோ. ஜான் ஜெயா, கனடா.**

என்னுடைய தொழில் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும்படி ஜெபிக்க எழுதினேன். உங்கள் ஜெபத்திற்கு நன்றி. கர்த்தரின் கிருபையால் தொழில் ஒப்பந்தம் புதுப்பிக் கப்பட்டது. தேவனுக்கே மகிமை.

**இதுபோன்ற நன்மைகளை கர்த்தர் உங்களுக்கும் செய்ய வேண்டுமா? உங்கள் ஜெபவிண்ணப்பங்கள் எதுவானாலும் எங்களுக்கு எழுதுங்கள். நாங்கள் ஜெபிக்கிறோம். கர்த்தர் பதிலளிப்பார்.**

## பத்திரிகை ஊழியம்

**Mrs. மணி தேவராஜ், கானிமடம்.**

என் பூர்வீக சொத்து கிடையாது என எதிர்ப்பாக இருந்தது. நான் கர்த்தரிடம் ஒப்புக்கொடுத்து ஜெபித்தேன். நவம்பர் மாத பத்திரிகையில் **'பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை'** என்ற வாக்குத் தத்தம் வந்தது. இழந்ததை திரும்ப பெறுவேன் என்று விசுவாசத்தோடு ஜெபித்தேன். சொத்து கிடைத்தது. பிள்ளைகளின் கஷ்டம் நீங்கியது.

**சகோதரி லிடியா, ஈரோடு.**

தாங்கள் அனுப்பும் **'தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்'** பத்திரிகை ஒவ்வொரு மாதமும் வந்தவுடன் சந்தோஷமாக படிப்பேன். ஒவ்வொரு வார்த்தையும் மனதிற்கு ஆறுதலாக உள்ளது.

## பின்தொடர்பணி ஊழியம்

**சகோதரி ஜெயலட்சுமி, பெரம்பலூர்**

நான் உண்மையான கடவுள் யார்? என தெரியாமல் மிகுந்த போராட்டத்தில் மனம் உடைந்து போய் வாழ்க்கையே வெறுத்துபோய் இருந்த நேரத்தில் தங்களிடமிருந்து இயேசுகிறிஸ்துவைப் பற்றிய புத்தகமும், லெட்டரும் வந்தது. அதை படித்த பிறகு மிகுந்த ஆறுதலும் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையும் உண்டானது. இயேசுவைப் பற்றி எதுவும் தெரியாமல் இருந்தேன். ஏதோ ஒரு சாமி என்று நினைத்தேன். ஆனால் இப்பொழுது **இயேசுவே மெய்யான தேவன்** என்பதை புரிந்துக் கொண்டேன். என்னை இயேசுவிடம் முழுமையாக ஒப்புக் கொடுத்துவிட்டேன். இன்னும் இயேசுவைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும், அவருக்காக ஊழியம் செய்ய வேண்டும் என்று ஆர்வமாக உள்ளது.

## கன்னியாகுமரி மாவட்ட TVGM அறிமுகப்பணி அலுவலகம்
## 2012 மார்ச் மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய கிருபையினால் மார்ச் மாத ஊழியங்கள் மிக நேர்த்தியாக முடிவடைய கர்த்தர் தமது அதிசயமான கிருபைகளை விளங்கப்பண்ணினார்.

**கிறிஸ்துநகர்** சி.எஸ்.ஐ. சபையில் ஞாயிறு ஆராதனையில் TVGM ஸ்தாபகர் **சகோ. P.T. கிறிஸ்டோபர்** அவர்கள் தேவசெய்தி கொடுக்கவும், மீண்டும் 15 வருடங்களுக்குப் பின் ஒரு அறிமுகப்பணி செய்யவும் கர்த்தர் கிருவை செய்தார். அதே நாளில் **வடலிவிளை** ஏ.ஜி. சபையிலும் ஒரு சிறிய அறிமுகப்பணி செய்ய தேவன் வழி திறந்தார். ஒத்துழைப்புக் கொடுத்த போதகர்களையும், சபையாரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

அதே நாளில் இரவில் **குளச்சல்** ஜேம்ஸ் ஆஸ்பத்திரியில் நடக்கும் மாலை ஆராதனையில் நாங்கள் யாவரும் கலந்து கொண்டு, ஊழிய அறிமுகம் செய்து பாடல்பாடி தேவநாமத்தை மகிமைப்படுத்த கர்த்தர் கிருபை செய்தார். **சகோ. P.T. கிறிஸ்டோபர்** தேவசெய்தி கொடுத்தார்கள். எங்களை அன்போடு உபசரித்து ஒத்துழைப்புக் கொடுத்த டாக்டர் அம்மா மற்றும் ஆஸ்பத்திரி ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும் கர்த்தர்தாமே பிரதிபலனை தந்து கனப்படுத்துவாராக.

தொடர்ந்து அடுத்தடுத்த மாதங்களில் செயல்படுத்த இருக்கும் திட்டங்களை கர்த்தரே வாய்க்கப்பண்ணி ஆசீர்வதிப்பார் என விசுவாசிக்கிறேன்.

**தேவனுக்கே மகிமை !**

**TVGM அறிமுகப்பணி அலுவலகம்**
**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001

கிறிஸ்துவின் பணியில்,
**N.ஷோபனா இவாஞ்ஜலின்**
செல்: **98658 26424**
போன் : 04652 - 277251

**நாளுக்கு நாள் அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்.** சங்.96:2

## TVGM 100கிராம ஊழிய தரிசன முகாம்

**இடம் :** நேசமணி மெமோரியல் காலேஜ்,
**மார்த்தாண்டம்,** கன்னியாகுமரி மாவட்டம்.

**நாள் : 2012** மே **26** சனிக்கிழமை

**நேரம் :** காலை 9 மணி முதல் மதியம் 2 மணி முடிய

**தரிசனசெய்தி**

**சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், C.E.O**
**சகோ. P.T. கிறிஸ்டோபர், ஸ்தாபகர்**

**யாவரும் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம் !**

**தொடர்பு முகவரி :** TVGM ஒருங்கிணைப்பாளர், நாகர்கோவில்.
போன் : 04652 - 277251 செல்: 98658 26424

# TVGM தலைமை அலுவலக தேவைகள்



TVGM தலைமை அலுவலக காம்பவுண்டில் முழுநேர ஊழியர்கள் குடும்பமாக சேவை செய்பவர்கள் 2 குடும்பம் குடியிருப்பதற்கான பழுதடைந்த வீட்டுக் கூரையை மாற்றி ஷீட் போட இக்கிறோம். இதற்கான தேவை ரூ.1,95,000. இந்த தேவைகளை தேவன் பரத்திலிருந்து அற்புதமாக சந்திக்கும் படியாக ஜெபியுங்கள்.

**1 சதுர அடி – ரூ. 250**

மொத்த தேவை **780** சதுர அடி – ரூ. **1,95,000**

## ஜெனரேட்டர் தேவை !



மின்தடை அடிக்கடி ஏற்படுவதினால் TVGM தலைமை அலுவலகத்திற்கும், சிறுவர் இல்லத்திற்கும் மிக அத்தியாவ சியமாக 2 ஜெனரேட்டர் தேவைப்படுகிறது.

இதை வாங்குவதற்கு ரூ. 1,92,000 தேவை. தேவன் தமக்கு சித்தமானவர்கள் மூலம் இந்த தேவையை அற்புதமாக சந்திக்கும்படியாக ஜெபியுங்கள்.

## ஜெபவீரர்கள் தேவை !

**முழுநேர ஜெபவீரர்கள்** : TVGM தலைமை அலுவலகம் – சோமரசம்பேட்டையில் தங்கியிருந்து தேசங்களுக்காக, TVGM ஊழியங் களுக்காக ஜெபிக்க ஆத்தும பாரமுள்ள முழுநேர **ஜெபவீரர்கள் தேவை.**

**தன்னார்வ ஜெபவீரர்கள்** : திருச்சி வட்டாரங்களிலிருந்து, TVGM தலைமை அலுவலக **சிற்றாலயத்திற்கு** வந்து, TVGM ஜெபக்குறிப்புகளை பெற்று ஒரு மணி நேரமோ அல்லது சில மணி நேரங்களோ தனித்து ஜெபிக்க **தன்னார்வ ஜெபவீரர்கள்** வரவேற்கப்படுகிறார்கள்.

## அர்ப்பணித்தவர்கள் தேவை !

1. தமிழ், ஆங்கிலம் கம்ப்யூட்டர் படித்தவர்கள்
2. டெம்போ டிராவல் டிரைவர்
3. சிறுவர் இல்லப் பிள்ளைகளை கவனிக்க வார்டன்
4. சமையல்காரர் , தோட்டவேலை

## இலங்கை தேசத்திற்கு சுவிசேஷம் !

இலங்கை தேசத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள தமிழ் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க சுவிசேஷப் புத்தகங்கள், கைபிரதி கேட்கிறார்கள்.

**கப்பலில் 10,000 கைபிரதிகள் அனுப்புவதற்கு**
**குறைந்த பட்சம் ரூ. 6500 வரை செலவாகிறது.**
**ஒரு சுவிசேஷப் புத்தகத்தின் விலை ரூ. 2**

கர்த்தர் இலங்கை தேசத்தை குறித்த பாரத்தை உங்களுக்கு கொடுப்பாரானால் இந்த தேவையில் பங்கு பெற்று, இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க உதவி செய்யுங்கள்.



ஒரிஸாவிலுள்ள **நர்லா** கிராமத்தில் TVGM சார்பில் நிலம் வாங்க கர்த்தர் கிருபை செய்தார். இதில் வரும் காலங்களில் ஜெபவீடு மற்றும் சிறுவர் இல்லம் கட்டப்பட ஜெபியுங்கள்.

நன்றி : **ஆடிட்டர் ஜான்** & Sis. **சாந்தா**

## பத்திரிகை சந்தா செலுத்தி விட்டீர்களா?

2012ம் ஆண்டிற்கான "100–கிராம ஊழியம்"பத்திரிகை சந்தா இதுவரை செலுத்தாதவர்கள் தயவுசெய்து உடனே சந்தாவை அனுப்பி புதுப்பித்துக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**ஆண்டு சந்தா இந்தியா ரூ. 25 வெளிநாடு ரூ. 250**

ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிகை வருமானாலும், உங்கள் முகவரி மாறினாலும் பழைய, புதிய முகவரியை தெளிவாக எழுதி தெரியப்படுத்தி உதவுங்கள்.

## பிறந்த நாள் / திருமண நாள்

உங்கள் பிறந்த நாள், திருமண நாள் மற்றும் உங்கள் பிள்ளைகள் பிறந்தநாளை இதுவரை எங்களுக்கு தெரிவிக்காதவர்கள் உடனே எழுதி தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக இந்த நாளில் விசேஷமாக ஜெபிக்கிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

# TVGM ஏலீம் சிறுவர் இல்லம் - திருச்சி



2012 மார்ச் மாதத்தில் சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு **சிறப்பு உணவளித்த** சகோதரி ஜாய் தாமஸ், சகோ. நடராஜன், சகோ. வெள்ளையன், சகோ.ராஜன், டாக்டர் சுவாமி கிரேஸ், பாஸ்டர் டேனியல், சகோ. கிறிஸ்துமணி மற்றும் இனிப்புகள் வழங்கிய சகோ. சாந்தப்பன், சகோ. வில்சன் ஆகியோருக்கும், பேனா வாங்கிக் கொடுத்த சகோ. ராஜா அவர்களுக்கும் நன்றி ! கர்த்தர் தாமே இவர்களை ஆசீர்வதிப்பாராக!

## முக்கியக் குறிப்பு

2011 - 2012 கல்வியாண்டில் திருநெல்வேலி மற்றும் திருச்சி சிறுவர் இல்லத்தில் 70 பிள்ளைகள் கல்வி பயின்று வந்தார்கள். பிள்ளைகளுக்கு உணவு, உடை, படிப்பு யாவும் இலவசமாக வழங்கப்பட்டது.

2012 - 2013 கல்வியாண்டிற்காக **1 முதல் 5 வகுப்பு** வரை படிக்கும் புதிய பிள்ளைகளை திருநெல்வேலி மற்றும் திருச்சி மாவட்டங்களிலிருந்து சேர்க்க இருக்கிறோம்.

எனவே திருநெல்வேலி மற்றும் திருச்சி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் உங்கள் பகுதியிலுள்ள தாய் அல்லது தகப்பனில்லாத, ஏழை பிள்ளைகள் இருந்தால் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.





04.03.2012 ஞாயிறு அன்று
Evangelical Church of India ( டெல்லி )
சபையில் தமிழ், இந்தி, தெலுங்கு ஆராதனைகளில் சகோ. P.T.கிறிஸ்டோபர் அவர்கள் தேவசெய்தி அளித்தார்கள். வாய்ப்பளித்த **Rev. விக்டர்** அவர்களுக்கு நன்றி. **தேவனுக்கே மகிமை !**

## தினமும் ஒரு நிமிடமாவது ஜெபிப்பீர்களா?

"**இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்**". **1தெச.** 5:17

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள் :** TVGM ஸ்தாபகர் சகோ. P.T. கிறிஸ்டோபர் அவர்கள் ஏப்ரல் 4 முதல் 26 வரை துபாய் ஊழியங்களுக்கு செல்ல வாய்ப்பளித்த தேவனைத் துதியுங்கள்.

மே 2 முதல் 22 வரை குவைத் செல்ல முயற்சிக்கிற காரியத்தில் விசா கிடைக்க ஜெபியுங்கள்.

**செவ்வாய் :** ஏப்ரல் 29 முதல் மே 1 வரை நடைபெறும் TVGM ஆண்டுவிழாவில் TVGM முழுநேர ஊழியர்களும், 100–கிராம ஊழியர்களும், ஊழியத்தை நேசிக்கிற பிள்ளைகளும் சேர்ந்து தேவனைத் துதிக்க, சுவிசேஷ ஊழியங்களுக்காக ஜெபங்கள் ஏறெடுக்கப்படும் அந்த நாளின் ஆசீர்வாதத்திற்காக ஜெபியுங்கள்.

**புதன் : சூறாவளிப்பட்டி , பஞ்சப்பூர்** கிராமங்களில் நடத்த இருக்கும் விடுமுறை வேதாகப் பள்ளியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

**வியாழன்: கல்பாக்கம், அச்சரப்பாக்கம், அதிராம்பட்டிணம், மகாராஷ்டிரா, பவானிபட்னா** ஆகிய இடங்களில் ஜெபவீடுகள் விரைவில் கட்டப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்படவும், இன்னும் அநேக ஜெபவீடுகள் ஆலயமில்லாத கிராமங்களில் கட்டப்படவும், இதற்கான பொருளாதார வாசலை தேவன் திறக்கவும் ஜெபியுங்கள்.

TVGM ஊழியத்தின் அன்றாட தேவைகள் அற்புதமாக சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

**வெள்ளி :** மே 26ம் தேதி **மார்த்தாண்டம்** – நேசமணி மெமோரியல் காலேஜியில் நடைபெறும் TVGM 100–கிராம ஊழிய தரிசன முகாமின் ஆசீர்வாதத்திற்காக, இதை ஒழுங்குபடுத்துகிற நாகர்கோவில் TVGM அறிமுகப்பணி அலுவலக பொறுப்பாளர் **சகோதரி ஷோபனா** மற்றும் குழுவினருக்காக ஜெபியுங்கள்.

**சனி :** ஒவ்வொரு மாதமும் நடைபெறும் 100–கிராம ஊழியத்தில் கலந்து கொள்ளும் ஊழியர்களின் பாதுகாப்பிற்காகவும், சுகத்திற்காகவும், இதை பொறுப்பாக கவனித்து வரும் **சகோ.பன்னீர்செல்வம்** குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள்.

**ஞாயிறு :** 2012 ஜுன் மாதம் நமது இரண்டு சிறுவர் இல்லத்திலும் புதிதாக சேர இருக்கும் பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள். திருநெல்வேலி மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலுமிருந்து பிள்ளைகளை சேர்க்கவிருக்கிறோம். 2012 - 2013 கல்வியாண்டில் சிறுவர் இல்லப் பிள்ளைகளின் தேவைகள் யாவும் அற்புதமாக சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

சிறுவர் இல்லத்திற்கு J.J. ஆர்டரை கர்த்தரை கிருபையாக கொடுக்க ஜெபியுங்கள்.

TVGM ஊழியங்களை நேசித்து ஜெபிக்கிற, கொடுக்கிற ஒவ்வொரு கர்த்தருடைய பிள்ளைகளின் ஆவிக்குரிய வாழ்விலும், குடும்பத்திலும் தேவன் நிறைவான ஆசீர்வாதங்களை கட்டளையிடும்படியாக ஜெபியுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி. 9 : 7

காணிக்கை , பத்திரிகை சந்தா, தபால் அனுப்ப வேண்டிய
**TVGM தலைமை அலுவலக முகவரி**


BRO.STEPHEN CHRISTOPHER C.E.O.
**TAMIL VILLAGE GOSPEL MISSION (TVGM)**
"1OO-VILLAGE" SOMARASAMPETTAI
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.
Ph: 0- 431 - 2607241 Cell : 94449 80445
Email : 100village@tvgm.org Web : www.tvgm.org

Founder : Bro . P.T. Christopher - Cell : 94435 44628


| நோக்கம் | காணிக்கை அனுப்ப வேண்டிய விபரம் |
|---|---|
| **100 கிராம ஊழியம்,** யோவான் சுவிசேஷம், பின்தொடர்பணி, **ஜெபவீடு** கட்டுதல், முழுநேர ஊழியர் மற்றும் வட இந்திய ஊழியங்கள் – கைபிரதிகள், ஆலயம் கட்டுதல் | **Tamil Village Gospel Mission**<br>SB. A/c :**12491010 - 23822** Indian Money<br>SB. A/c : **12491010 -11947** Foreign Money<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |
| சிறுவர் இல்ல பிள்ளை– களின் பராமரிப்பு, சிறுவர் இல்ல கட்டிடம், **மருத்துவ நிதி, தையற்மிஷின், தொழுநோயாளர், விதவைகள், பார்வையற்றோர் , ஏழை, எளியவர் உதவி** | **TVGM Social service** ( 80G வரி விலக்கு உண்டு)<br>SB. A/c : **12491010 - 23805** Indian Money<br>SB. A/c : **12491010 - 24967** Foreign Money<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |
| **TASOL**<br>**நிலம் வாங்குதல்**<br>**உயர் கல்வி நிதி** | **The Ambassador School of Learning - 80G** வரி விலக்கு<br>SB. A/c : **12491010 - 38110** Indian Money only<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |
| **பத்திரிகை சந்தா**<br>**அச்சகம்** | TVGM Publication<br>SB. A/c : **12491010 - 25265** ( Indian Money)<br>**Canara Bank,** Puthur Branch Code 1249, Trichy - 620 017 |

**குறிப்பு :** ஸ்தாபனம் பெயரில் காணிக்கைகளை அனுப்ப முடியாவிட்டால் Stephen Christopher S.B. A/c . No : **10848511949** State Bank of India Code : 930 Main Branch, Trichy, India. என்ற பெயரிலும் செக், டிராப்ட் எடுத்து அனுப்புங்கள்


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
POSTAL REGISTRATION NUMBER :TRY / 066 / 2012 - 2014
Posting Date 25th at Trichy RMS

**ஆலயத்தைக் கட்டுங்கள், அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன்.**


அதிராம்பட்டிணம்


கல்பாக்கம்


அச்சரபாக்கம்

ஆகிய மூன்று இடங்களிலும் ஜெபவீடுகள் விரைவில் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.





திருச்சி – பஞ்சப்பூர் தொழுநோயாளர் காலனியிலுள்ளவர்களுக்கு அலுமினிய வாளிகள் மற்றும் பிளாஸ்டிக் வாளிகள் வழங்கப்பட்டது.

**நன்றி : ஆபிரகாம் சாமுவேல்**

To

**Return Requested:** Tamil Village Gospel Mission
100 - Village,
Somarasampettai, Trichy - 620 102. India.